*ஜூன் 4, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தைகளே, "பாபா உங்களை என்னுடைய வாரிசு ஆக்கிக்கொண்டிருக்கின்றேன்" என்று நீங்கள் பாபாவிடம் கூறும் போது, அப்படி பட்ட குழந்தைகளிடம் தந்தை சரணடைகின்றார். அதன் பின்னர் குழந்தைகளாகிய நீங்கள் கூறுகின்றீர்கள்: "கடவுளே, நீங்கள் வரும்போது, உங்களிடம் என்னை நான் சரணடைந்து உங்களை என்னுடைய குழந்தை ஆக்கிக்கொள்வேன்.'' நீங்கள் எவ்வாறு தந்தையை உங்கள் வாரிசு ஆக்கிக்கொள்வீர்கள்? இதுவும் ஒரு மிக ஆழமான விஷயம். உங்களிடமிருக்கும் அனைத்தையும் பரிமாறிக்கொள்வது உங்கள் புத்தியின் ஒரு பணியாகும்.

இனிமையான பாபா, நீங்கள் என்னுடைய வாரிசு ஆவீர்கள். உங்களை என்னுடைய குழந்தையாக நான் ஏற்றுகொள்கின்றேன், மேலும் நான் உங்களிடம் சரணடைகின்றேன். நான் ஒரு அற்ப தொகையை கொடுக்கிறேன். அதற்கு பதிலாக நீங்கள் எனக்கு ஒரு அரண்மனையை கொடுக்கின்றீர்கள். இந்த பரிமாற்றத்தின் மூலம் என்னுடைய குழந்தையாகிய உங்களிடமிருந்து தூய, ஆழமான உண்மையான அன்பை அனுபவம் செய்கின்றேன். நான் உங்களை என்னுடைய வாரிசு ஆக்கிக்கொள்ளும் போது, நீங்கள் என்னை உங்களுடைய வாரிசு ஆக்கிக்கொள்கின்றீர்கள். என்னிடமிருக்கும் அனைத்தையும் நான் கொடுக்கும் போது, நீங்கள் எனக்கு ஒரு வினாடியில் ஜீவன் முக்தி கொடுக்கின்றீர்கள்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: அவரை உங்கள் வாரிசு ஆக்கிக்கொண்டவுடன், நீங்கள் உங்கள் சொந்த வாழ்க்கைக்காக சம்பாதிக்க வேண்டும். வெறுமனே ஒரு பொறுப்பாளராக வாழுங்கள். இவ்வாறு இருக்க அவர் உங்களுக்கு பல வழிகளை கொடுக்கின்றார். நீங்கள் யாராவது எந்த பாவ செயல்களுக்காக பணம் செலவழிக்கின்றீர்களா என்பதை தந்தை வெறுமனே கண்காணித்துக்கொண்டு இருக்கின்றார். நீங்கள் உங்கள் பணத்தை மனிதர்களை புண்ணிய ஆத்மா ஆக்குவதற்கு பயன்படுத்துகின்றீர்களா? நீங்கள் திட்டமிட்டு சேவை செய்கின்றீர்களா?

இனிமையான பாபா, நான் ஒரு பொறுப்பாளரின் மனோபாவத்தை ஏற்றுக்கொள்வதில் உறுதியாக இருக்கின்றேன். நான் என்னுடைய உடல், மனம், மற்றும் செல்வத்திற்கு ஒரு பொறுப்பாளராக இருக்கின்றேன். நான் ஒரு அன்பான இதயத்துடன் உங்களுக்கு இந்த பொக்கிஷங்களை ஒப்படைக்கின்றேன். பொறுப்பாளரின் மனோபாவத்தின் மூலம், நான் உங்களுடைய நம்பிக்கைக்கு தகுதி பெற வேண்டும். பாபா, நான் உங்களுடைய பணிக்கு ஒரு பொறுப்பாளராக இருக்கின்றேன். நான் என்னுடைய பலவீனங்களில் பணம் செலவழிப்பதில் என்னை ஈடுபடுத்திக்கொள்ளாது இருப்பதில் கவனம் செலுத்துவேன். பொறுப்பாளர் என்ற மனோபாவமானது உங்கள் தெய்வீக அன்பின் ஓர் அனுபவத்தை எனக்கு கொடுக்கின்றது.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

பாபா ஆத்மாவிற்கு: நீங்கள் அனைவரும் உங்கள் கர்மாதீத நிலையை அடையும் போது, அனைவரும் வீடு திரும்புவார்கள். "சிவனின் திருமண ஊர்வலம்" நினைவு செய்யப்படுகின்றது. சிவ்பாபா வருகின்றது போதுதான் நீங்கள் அனைவரும் வீட்டிற்கு திரும்ப முடியும். சிவ்பாபா வெறுமனே அனைவரையும் மீண்டும் வீட்டிற்கு அழைத்து செல்ல வருகின்றார்.

இன்று என்னுடைய திருஷ்டியில், அனைத்து ஆத்மாக்களும் பாபாவுடன் வீட்டிற்கு செல்லும் படத்தை வைத்திருப்பேன். இன்று, நான் மற்றொரு மனிதரை சந்திக்கும் போதெல்லாம், அவர்களை ஆத்மாவாக, ஒரு திருமண ஊர்வலத்தின் தலைவரான பாபாவுடன் வீட்டிற்கு திரும்ப செல்லும் ஒரு சிறிய ஒளி புள்ளியாக பார்க்கின்றேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.